**தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை** – 15-5-2012

---

"உலகம் ஒரு குடும்பம்'' என்னும் உன்னத தத்துவத்தை அடைய உறுதுணையாக விளங்கும் போக்குவரத்துகளில், பயணிகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லுதல்; அத்தியாவசிய பொருட்களை அனைத்து பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல்; தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களை எடுத்துச் செல்லுதல்; விவசாயப் பொருட்களை விற்பனைக்கு ஏற்றி செல்லுதல்; போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சாலைப் போக்குவரத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்களின் சேவை மகத்தானது.

இத்தகைய ஓட்டுநர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி சட்டம், **1974–**ன் கீழ், பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாகக் கொண்டு செல்லும் வாடகை வாகன உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதிக்காக **1** சதவீத கூடுதல் வரி பல ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நல வாரியம் ''தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியம்" என்ற பெயரில் தற்போது இயங்கி வருகிறது. எனவே இந்த வாரியத்தில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஊர்தி ஓட்டுநர்கள் மட்டுமே உறுப்பினராக முடியும் என்ற எண்ணத்தை ஓட்டுநர்களிடம் தோற்றுவிக்கும் வகையில் உள்ளதால் லாரி மற்றும் வேன் போன்ற இதர வாகன ஓட்டுநர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து கொள்ள வழிவகை இருந்தாலும், அவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்வது இல்லை. தமிழ்நாட்டில் தற்போது சுமார் **10** லட்சம் அமைப்பு சாரா ஊர்தி ஓட்டுநர்கள் உள்ளார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியத்தில் **1** லட்சத்து **39** ஆயிரத்து **595** நபர்களே உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது எனது அரசின் விருப்பமாகும்.

எனவே, இந்த வாரியத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் அனைவரும் உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ள வழிவகை ஏற்படும் வகையிலும், இந்த வாரியத்தின் நல திட்ட உதவிகள் அனைத்து ஓட்டுநர்களுக்கும் சென்று அடையவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், ''தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்" என்ற இந்த வாரியத்தின் பெயரை ''தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்'', அதாவது "Tamil Nadu Unorganised Drivers Welfare Board" என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானிய கோரிக்கையின் போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******